விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட வேப்பூர் தாலுகாவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தரமுயர்த்தித் தந்தமைக்கு, முதலில் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தாலுகா மருத்துவமனையில், போதிய மருத்துவர்களை உடனடியாக நியமனம் செய்து அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு மருத்துவ வசதியை சிறப்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் எத்தனை இருக்கின்றனவோ, அவை உடனடியாக நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

***9632—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2017 மார்ச் 23]

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் பகுதியில் 400 காப்பீட்டு நபர்கள் வசிப்பதாகக் கண்டறியப்பட்டு, 1–2–2008 முதல் தென்காசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் மாவட்டவாரியான கணக்கெடுப்பின்படி, கடையநல்லூர் பகுதியை உள்ளடக்கிய தென்காசி வட்டத்தில், தற்போது தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர, 475 தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக்கழகத்தின்மூலம்செயல்படுத்தப்பட்டுவரும்திட்டமாகும். அக்கழகத்தின் விதிமுறைகளின்படி, காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 50,000–க்கு மேல் இருந்தால் மட்டுமே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியில் பீடி சுற்றக்கூடிய தொழிலாளர்கள், விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் என பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். தரம் வாய்ந்த E.S.I. மருத்துவமனை திருநெல்வேலியில்தான் உள்ளது. இத்தகைய தொழிலாளர்கள் காச நோய் மற்றும் புற்று நோய் போன்ற கொடூரமான நோய்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவதால், உடனடி சிகிச்சையை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அவர்கள் திருநெல்வேலிக்கு சென்றுதான் மேற்கொள்ள வேண்டியுள்ளது.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *ஏற்கெனவே அங்கே பல்வேறு நிலைகளிலே சுகாதாரக்கேடுகளால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இதுபோன்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு*

கடையநல்லூர் தொகுதியிலேயே ஒரு தரம் வாய்ந்த E.S.I.– தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை கண்டிப்பாக அமைக்க அரசு முன்வர வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த E.S.I. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, organised sector தொழிலாளர்களுக்கு மட்டும்தான் அமையும். 4–12–2014 அன்று புதுதில்லியில் நடைபெற்ற தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் 163 வது கூட்டத்தில் 100 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டுவதற்கு அப்பகுதியில் ஐம்பதாயிரம் காப்பீடு நபர்கள் வசிக்க வேண்டுமென்ற புதிய வரன்முறை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆதலால், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் விதிமுறைகளின்படி காப்பீட்டாளர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்திற்கும் மிகும் இடங்களில் மட்டுமே மருத்துவமனை அமைக்க முடியும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *எனவே, கடையநல்லூர் பகுதியிலே தற்போது குறைந்த எண்ணிக்கையில் தொழிலாளர்கள் இருப்பதால் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் E.S.I. மருத்துவமனை துவங்குவதற்கு ஐம்பதாயிரம் பயனாளிகள் இருக்க வேண்டுமென்ற விவரத்தைச் சொன்னார்கள். ஆனால், அங்கே பீடித் தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றவர்கள் புற்றுநோய்,*

2017 மார்ச் 23]

காசநோயினாலே அதிகமாக பாதிக்கப்பட்டு வருவதாலே அதைத் தடுப்பதற்குண்டான ஒரு நடவடிக்கையாக வேறு ஏதாவது ஒரு மருத்துவமனையையாவது அவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதைத் தங்கள் வாயிலாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஏதாவது ஓர் அரசு மருத்துவமனை தேவையென்றால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஆலோசித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கோதண்டபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

பேருந்து வசதி

***6741—திரு. மு. கோதண்டபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வேயிலிருந்து மாமல்லபுரத்திற்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பயணிகள் பிராட்வேயிலிருந்து மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலமாக அடையாறு வந்தடைந்தால் அங்கிருந்து மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகளைப் பயன்படுத்தி மாமல்லபுரம் வந்தடையலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.